1973 மார்ச் 8]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1970-71, 1971-72-ம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில முத்துக்குளிப்பு ஏதுவும் நடைபெறவில்லை. முத்துக் குளித்தல் தொடர்ச்சியாக நடைபெறக்கூடியதுமல்ல. ஆண்டுதோறும் நடைபெறக்கூடியதுமல்ல. அது காலசுழற்சியில் ஒருமுறை நடைபெறுவதாகும். 26 ஆண்டுகளுக்குப் பின்னா, கடைசியாக 1955 முதல் 1961-ம் ஆண்டு வரை முத்துக்குளித்தல் நடைபெற்றது. 1971-ல் நடத்தப்பட்ட முத்துச்சிப்பிபார் ஆய்வு, 1973-ல் சில பகுதிகளில் முத்துக் குளிப்பு நடத்துவதற்கான வாய்ப்பு இருப்பதைப் புலப்படுத்தியுள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தற்போது முத்துக்குளிப்பது, சங்கு குளிப்பது அரசுத் துறையில் நடக்கிறதா அல்லது தனிப்பெரும் முதலாளிகள் தரப்பில் நடக்கிறதா? அல்லது தொழிலாளர்களே முத்துக் குளித்து, சங்கு குளித்து தாங்களே எடுத்துக் கொள்கிறார்களா? அவர்களுக்கு அதை விற்க வசதி உண்டா? கூட்டுறவுச் சங்கங்கள் உண்டா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: முத்துக் குளித்தல் வேறு, சங்கு குளித்தல் வேறு. முத்துக் குளித்தல் இப்போது நடக்கவில்லை. சங்கு குளித்தல்தான் நடக்கிறது. கூட்டுறவு மூலமாக தொழிலாளர்களே சங்கு எடுக்கிறார்கள். தொடர்ந்து முத்துக் குளிப்பதற்கு கடலில் முத்துக்கள் இல்லை.

திரு. கே. எ. வகாப் : தொடர்ந்து முத்துக் குளிப்பதற்கு வேண்டிய முத்துக்கள் கடலில் இல்லையென்று சொன்னார்கள். ஜப்பான் நாட்டில் முத்துக்கள் பயிர் செய்கிறார்கள். செயற்கை முறையில் கடலில் பயிர் செய்கிறார்கள். ஜப்பான் கூட்டுறவோடு அந்த முறை நம் நாட்டிலும் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படி ஜப்பான் நாட்டோடு தொடர்பு கொண்டு மண்டபத்தில் ஆராய்ச்சி நடைபெறுகிறது. சிப்பிகளை எடுத்து இஞ்செக்ஷன் மூலம் ஏதோ ஒரு மருந்தைச் செலுத்தி கடலில் போட்டு செயற்கை முறையில் முத்துக்களை அதிகமாக எடுப்பது பற்றி மண்டபத்தில் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

பிச்சையெடுத்தலைத் தடுத்தல்

* 286 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி, ஸ்ரீரங்கம் போன்ற பக்தர்கள் கூடும் நகரங்களில் பிச்சைக்காரர்களின் தொல்லையை அகற்ற அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இம்மாநிலத்தில் பக்தர்கள் கூடும் நகரங்களிலும், சுற்றுலாப் பயணிகள் கூடும் இடங்களிலும் பிச்சைக்காரர்களின் தொல்லையை அகற்றிட, காவல்துறையினர், காலமுறைக் கண்காணிப்பின் மூலம் பிச்சைக்காரர்களைப் பிடித்து, தமிழ்நாடு பிச்சை எடுத்தல் தடுப்புச் சட்டம் 1945-ன் கீழ் தண்டித்து, காப்பு முகாம் அல்லது பணி இல்லம் அல்லது பிச்சைக்காரர் இல்லங்களுக்கு அனுப்புகிறார்கள்.

புலவர் சி. பழனிச்சாமி: தமிழகத்திலே பழனி நகரில்தான் மிக முக்கியமான முருகன் கோவில் இருக்கிறது. ஆண்டுதோறும் பல லட்சக் கணக்கான பக்தர்கள் வருகிறபடியால், அங்குதான் ஆயிரக்கணக்கில் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் தொழுநோய் உடையவர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். எனவே அடுத்து அமைக்க இருக்கும் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லத்தை பழனி நகரில் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நான் சற்றுமுன்னர் கூறியது போல் பக்தர்கள் கூடுகிற ஆலயங்கள் போன்ற இடங்களில் இருக்கிற பிச்சைக்காரர்களை பிச்சைக்காரர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் போலீசார் அவர்களை கைது செய்துகொண்டு வந்து காப்பு இல்லங்களில் வைக்கிறார்கள். அந்த முறையில் பழனியில் உள்ள பிச்சைக்காரர்களையும் கொண்டு வந்து வைப்பதற்கு இப்போதும் சட்டம் இருக்கிறது. தொழுநோய் பிச்சைக்காரர்களை, அப்படி பிச்சை எடுப்பவர்களை கைது செய்து இப்போது உளுந்தூர்பேட்டையில் உள்ள பிச்சைக்காரர்கள் இல்லத்தில் கொண்டு வந்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பொதுவாகவே, பிச்சைக்காரர்கள் பற்றி இன்று நல்ல முறையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக தொழுநோய் பிச்சைக்காரர்களுக்காக பல இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டு, ஏழு இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டு அதில் ஐந்து இல்லங்கள் திறக்கப்பட்டு விட்டன, இன்னும் இரண்டு திறக்கப்படும் தருவாயில் இருக்கின்றன. இப்படிப்பட்ட இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்ட பிறகு தொழுநோய் பிச்சைக்காரர்களை கட்டாயம் போலீசார் கைது செய்து அந்த இல்லங்களில் வைத்து அவர்களுக்கு மறுவாழ்வு தருகிற வகையில் அரசாங்கம் ஈடுபடும்.

THIRUMATHI ALDA M. FOWLER: Sir, will the Hon. Minister be kind enough to state what has been covered under the Plan for Beggar Relief?

1973 மார்ச் 8]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள் ஒன்றும் அரசு சார்பில் அரசாங்க நிதி ஒதுக்கீட்டிலிருந்து இப்போது செயல்படவில்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பிறந்த தினத்தன்று பொதுமக்கள், பிச்சைக்காரர்கள் தொல்லை நீக்கப்படவேண்டும், அவர்களுக்கு மறுவாழ்வு தரவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கிற மக்கள் அவர்கள் நன்கொடை தந்து அதன்மூலம் அவர்களுக்கு மறுவாழ்வு தரவேண்டும் என்ற முறையில்தான் இன்று முதல் அமைச்சர் அவர்கள் நிதியிலிருந்து இவைகள் எல்லாம் ஈடு கட்டப்பட்டு இத்திட்டம் நிறைவேறிக் கொண்டு வருகிறது. அந்த வகையில்தான் இங்கு செயல்பட்டு வருகிறது.

MR. DEPUTY SPEAKER: I am afraid you are not convinced. your question was not quite clear.

THIRUMATHI ALDA M. FOWLER: There is a plan for beggar relief, is it not? We want to know what has been done so far for their rehabilitation. We still have a lot of them, a multitude of them everywhere. What relief has been given and in what shape and in what form? Sir, can we have the answer in English please?

MR. DEPUTY SPEAKER: Even now your question is ambiguous. All right.

THE HON. THIRUMATHI SATHYAVANIMUTHU: Sir, this problem of beggary had been engaging the attention of the Government for sometime and the Government have come to the conclusion that unless the problem is tackled in a big way, it will be difficult to find a solution. As a first step, it was decided to rehabilitate the beggars suffering from leprosy and for this purpose, it was decided to start ten Special Care and Rehabilitation Homes for leprous beggars in the State. For administering the beggar rehabilitation Fund and to advise the Government in matters relating to beggar rehabilitation an Advisory Committee has been constituted with 11 members. The Fund was raised on 3rd June 1971, the Birth-day of our Hon. Chief Minister. The collection in the fund is Rs. 1 crore and odd. This is administered by a separate Committee.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தப் பிச்சைக்காரர்கள் எல்லாம் பழனி, ஸ்ரீரங்கம் போன்ற இடங்களில் ஆலயங்களுக்கு அருகாமையில் வந்து சேராமல் தூர இடத்தில் வேண்டுமானால் அவர்கள் பிச்சை எடுக்கட்டும் என்ற

அளவிற்கு அதைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் ஆரம்பத்தில் கூறியது போல் அந்தப் பிச்சைக்காரர்கள், அவர்கள் ஆலயங்களின் அருகில் இருக்கிற பிச்சைக்காரர்களாக இருந்தாலும் சரி அல்லது வேறு பொது இடங்களில் உள்ள பிச்சைக்காரர்களானாலும் சரி சட்டப்படி அவர்களைக் கைது செய்து கொண்டு வந்து வைத்தாலும் அவர்கள் ஓடிவிடுகிறார்கள்.

குறிப்பாக, தொழுநோய் பிச்சைக்காரர்களால் பல துன்பங்கள் நேரிடுகிறது என்று பொதுமக்கள் கருதுவதால் இப்போது உளுந்தூர்பேட்டையில் உள்ள ஒரு இல்லத்தில் மட்டும் அவர்களுக்கு 73,000 ரூபாய் செலவில் வேலி எல்லாம் போட்டு பார்ப்ட் வொயர்ஸ் போட்டு அவர்களை வெளியில் செல்ல விடாத அளவிற்கு பிச்சைக்காரர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து கொண்டு வைக்கப்படுகிறார்கள். பொதுவாக சட்டம் இருந்தாலும் அங்கு கொண்டு வந்து வைக்கிறவர்கள் ஓடி விடுகிறார்கள். அவர்களை, இப்படிப்பட்ட இல்லங்கள் முழுவதும் கட்டி முடித்துவிட்ட பிறகு அவர்களை கட்டாயமாக கொண்டுவந்து வைப்பதற்கான ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் செய்யும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : பொதுவாக, இந்து, முஸ்லீம், கிருத்துவ பெரியார்கள் அடக்க ஸ்தலங்களில்தான் பொதுவாக பிச்சைக்காரர்கள் அதிகமாகக் காணப்படுகிறார்கள். இவர்களில் ஒரு சிலர் நோயுற்றவர்களாக இருந்தாலும் ஒரு சிலர் நல்ல திடகாத்திரர்களாக, சமுதாயத்தில் நல்ல பணிகள் செய்து உழைத்து முன்னேற்றத்தக்கவர்களாக இருந்தும் இந்தப் பிச்சைக்காரத் தொழில் லாபகரமாக இருப்பதன் காரணமாக இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் கைது செய்து கட்டாய முறையில் அவர்களுக்கு தொழில் பயிற்சி அளித்து சமுதாயத்திற்கு அவர்கள் பயன்படுபவர்களாக இருக்கும் விதத்தில் நிர்ப்பந்தமாக அவர்களை ஏதாவது பணியில் ஈடுபடுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பிச்சைக்காரர்களில் பெரும்பாலானவர்கள் நோயாளிகள், அங்கஹீனமாக இருக்கிறார்களே தவிர சிறுபான்மையினர்தான் இப்படி வேண்டுமென்றே பிச்சை எடுப்பதன் மூலம் வருமானம் கிடைக்கிறது என்று தங்கள் வாழ்க்கையை பிச்சை எடுப்பதில் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். பிச்சைக்காரர்கள் எல்லோரும் பிச்சைக்காரர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகிறார்கள். அப்படி கைது செய்துகொண்டு வைக்கப்பட்டவர்களில் சிலர் ஓடிவிடுகிறார்கள். எனவே முதலில் தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்க

வேண்டும் என்ற முறையில் அதை முதலில் நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். அவர்களுக்கு நல்ல பாதுகாப்பு இல்லங்கள் எல்லாம் கட்டி முடிக்கப்பட்ட பிறகு அரசாங்கம் அவர்களை அங்கு கொண்டு வந்து வைத்த பிறகு நல்ல முறையில் நோயற்றிருக்கிற பிச்சைக்காரர்கள்மீது அரசு கவனம் செலுத்தும்.

திரு. நா. வீராசாமி : பிச்சைக்காரர்கள் பெருகுவதற்குக் காரணம் பிச்சை எடுப்பது மட்டுமல்ல, பிச்சை போடவேண்டும் என்ற ஒரு மனப்பான்மை சில பக்தர்களுக்கு வளருகிறது. ஆகவே கோவில்களுக்குப் போகிறவர்கள் இவர்களுக்கெல்லாம் ஏதோ பிச்சை போட்டால்தான் புண்ணியம் கிடைக்கும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். எனவே பிச்சை போடாமல் இருப்பதற்கும், அப்படி பிச்சை போடுகிறவர்களிடமிருந்து பிச்சைக்காரர்கள் வசூலிக்காமல் உண்டியல்கள் போன்றவற்றை வைத்து அதன் மூலம் வருகிற அந்த நிதியை வைத்து இந்த பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள்தான் பிச்சை போடுவது எந்தளவிற்கு பிச்சை எடுப்பவர்களை ஊக்குவிக்கிறது என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் அந்தப் பணியில் ஈடுபடவேண்டும். பிச்சைக்காரர்களுக்கு பிச்சை போடுவதால்தான் தங்களுக்கு முக்தி கிடைக்கும் என்று பக்தர்கள் தவறான ஒரு எண்ணத்தைக் கொண்டிருப்பதால் ஆலயங்களுக்குச் செல்கிறவர்கள், பிச்சை போடக் கூடாது என்ற எண்ணம் இருக்கிறவர்கள் கூட அங்கு சென்றால் பிச்சை போட்டுத்தான் வருகிறார்கள். இந்த மனப்பான்மையை காலப்போக்கில்தான் மாற்றமுடியும்.

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை : சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிகளில் நன்கொடை என்ற பெயரால் அடிக்கடி நாகரீகப் பிச்சைக்காரர்கள் வந்து எங்களுக்கு தொல்லை கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதனைத் தடை செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தமாதிரி சொல்லக் கூடாது. பலர் வருகிறார்கள். எல்லோரையும் மொத்தமாக இங்கு குற்றஞ் சாட்டக் கூடாது. பிச்சைக்காரர்களை அவ்வளவு இழிவாகவும் சொல்லக்கூடாது.

(பதில் இல்லை)

திரு. ஆ. முனியாண்டி : இதுவரை துவக்கப்பட்டுள்ள பிச்சைக்கார விடுதிகளில் ஒரு பார்ப்பனராவது இடம் பெற்றிருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பிச்சைக்காரர்கள் என்றுதான் இனம் பிரிக்கிறார்களே தவிர ஜாதிப்படி பிச்சைக்காரர்களைப் பிரிக்கவில்லை.